# கூரியர் கார்கோ சேவை: திருச்சி ஏர்போர்ட்டில் விரைவில் தொடக்கம்

தினமலர் திருச்சி, மார்ச் 9-13

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கூரியர் கார்கோ துவக்க உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா? என்று விமான நிலைய அதிகாரிகளிடம் சுங்கத்துறை கேட்டுள்ளது. இதையடுத்து திருச்சியில் இருந்து வெளிநாடுகளுக்கு கூரியர் கார்கோ வசதி விரைவில் தொடங்கப்படும் என்று தெரிய வந்துள்ளது.

திருச்சி விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர், மலேசியா, துபாய், கொழும்பு ஆகிய வெளிநாடுகளுக்கு விமான சேவை இருந்து வருகிறது. இந்த நாடுகளுக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், மிகின் லங்கா, ஏர் ஏசியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், டைகர் ஏர்வேஸ் போன்ற விமான நிறுவனங்கள் விமான சேவையை இயக்கி வருகின்றன.

இவற்றில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், ஏர் ஏசியா, மிகின் லங்கா, டைகர் ஏர்வேஸ் போன்றவை கார்கோ சேவையை வழங்கி வருகின்றன. திருச்சி விமான நிலையத்தில் கார்கோ சேவை துவக்கப்பட்ட 5 மாதங்களில் ஒரே மாதத்தில் அதாவது கடந்த 2012ம் ஆண்டு மே மாதம் அதிகபட்சமாக 281 டன் சரக்கு ஏற்றுமதி செய்து புதிய சாதனை எட்டப்பட்டது.

தற்போது 300 டன் எட்ட வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டதன் வாயிலாக கடந்த ஜனவரியில் 309 டன்னும், பிப்ரவரியில்(28 நாட்களில்) 307 டன்னும் வெளிநாடுகளுக்கு சரக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கோடை காலம் துவங்கிவிட்ட நிலையில் மாம்பழ சீசன் துவங்கிவிடும் என்பதால் மார்ச் மாதத்தில் 350 டன்னை தாண்டும் வாய்ப்பும் உருவாகியிருக்கிறது. இது ஒருபுறம் இருக்க, திருச்சியில் இருந்து 'கூரியர் கார்கோ' சேவை துவக்க வேண்டும் என கடந்த 2009ம் ஆண்டு முதல் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் கூரியர் . நிறுவனங்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், மத்திய நிதித்துறையிடம் இருந்து சென்னை சுங்கத்துறை முதன்மை கமிஷனருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதில் கூரியர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் தொடர்பாக பரிசீலனை செய்ய சாத்தியக்கூறு அறிக்கையை திருச்சி சுங்கத்துறை கமிஷனர் உடனே அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதில் திருச்சி சுங்கத்துறை தாமதம் செய்து வந்ததாக குற்றம் சாட்டப்பட்டு வந்தது. திருச்சி விமான நிலையத்தில் இருந்து கூரியர் கார்கோ சேவை துவக்கினால் ஏபிஎஸ் எக்ஸ்பிரஸ், பெட்எக்ஸ், டிஎச்எல், ஆர்எம்எக்ஸ், ஆராமெக்ஸ், டிஎன்டி போன்ற பல்வேறு வெளிநாட்டு தொடர்புடைய நிறுவனங்கள் சேவை வழங்க தயாராக உள்ளன.

இதன்படி நாள் ஒன்றுக்கு சராசரியாக 4 டன் அளவுக்கு கூரியர் கார்கோ அனுப்ப வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதாக இந்த நிறுவனங்கள் சார்பில் அறிக்கை அனுப்பப்பட்டது. விமான நிலைய நிர்வாகம் சார்பிலும் கூரியர் கார்கோ தொடங்க அனுமதி வழங்க சுங்கத்துறையிடம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கூரியர் அனுப்பும் மக்களுக்கும்,, கூரியர் நிறுவனங்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் தகவல் வெளியாகியுள்ளது. தற்போது திருச்சி சுங்கத்துறை முதன்மை கமிஷனராக அனந்த பத்மனாபன் வந்தபின், கூரியர் கார்கோ துவக்கும்' பணி துரிதப்பட்டுள்ளது.

இதற்காக சுங்கத்துறையிடம் இருந்து விமான நிலைய அதிகாரிகளுக்கு கூரியர் கார்கோ துவக்கினால், உட்கட்டமைப்பு வசதிகள் தற்போது என்னென்ன உள்ளன?

என்பது குறித்து விரிவான அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை பெற்ற பின், மேலிடத்துக்கு அனுப்பப்படும். இந்த பூர்வாங்க நடவடிக்கை 'கூரியர் கார்கோ' விரைவில் துவக்க மேற்கொள்ளப்படும். அறிகுறி என்றே சுங்கத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

திருச்சி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாறிய பின், கூடுதல் விமான நிறுவனங்கள் விமான சேவையை துவக்க திட்டமிட்டுள்ளன. இதன் மூலம் உலகின் எந்த மூலைக்கும் கூரியர் தபால் விரைவில் சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை.